**திருத்தப்பட்டது – கூடுதல் விவரங்களுடன்**

<u>செய்தி வெளியீடு எண்.178</u> <u>நாள்.25.2.2010</u>

**<u>மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.2.2010 அன்று புதுடெல்லி சென்று, தமிழக புதிய சட்டமன்றப் பேரவைச் செயலகம் திறப்பு விழா – 13.3.2010 அன்று நடைபெறுவதை முன்னிட்டு மேதகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் திருமதி.சோனியா காந்தி, மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு நேரில் அழைப்பிதழ்களை வழங்கினார்கள்.</u>**

மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் 13.3.2010 (சனிக்கிழமை) அன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ளள புதிய சட்டமன்ற பேரவையை திறந்து வைக்க உள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் திருமதி.சோனியா காந்தி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி, மாண்புமிகு மத்திய–மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற–சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

புதிய சட்டமன்றப் பேரவை திறப்பு விழாவிற்கான அழைப்பிதழ்களை நேரில் வழங்குவதற்காக, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.2.2010 (புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு விமானம் மூலம் புதுடெல்லி புறப்பட்டுச் சென்று, அன்று இரவு மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு.பிரணாப் முகர்ஜி, மாண்புமிகு மத்திய கப்பல்துறை அமைச்சர் திரு.ஜி.கே.வாசன், மாண்புமிகு நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் திரு.நாராயணசாமி ஆகியோரை நேரில் சந்தித்து அழைப்பிதழ்களை வழங்கினார்கள்.

இன்று (25.2.2010) காலை பாராளுமன்ற வளாகத்தில் உள்ள அலுவலகத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங், மாண்புமிகு மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு.வீரப்ப மொய்லி, மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.குலாம் நபி ஆசாத், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு.பிரகாஷ் காரத், மாண்புமிகு மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா, பாராளுமன்ற உறுப்பினர் திரு.ராகுல் காந்தி ஆகியோரை நேரில் சந்தித்து அழைப்பிதழ்களை வழங்கி விழாவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

இன்று (25.2.2010) மதியம், மேதகு குடியரசுத் தலைவர் திருமதி.பிரதீபா பாட்டீல் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து அழைப்பிதழை வழங்கினார்கள்.

இன்று (25.2.2010) மாலை, ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் திருமதி.சோனியா காந்தி , மேதகு துணை குடியரசுத் தலைவர் திரு.முகமது அன்சாரி, மக்களவை சபாநாயகர் திருமதி.மீராகுமாரி, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு.ப.சிதம்பரம், மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு.எஸ்.எம்.கிருஷ்ணா, மாண்புமிகு மத்திய இரயில்வேத்துறை அமைச்சர் செல்வி.மம்தா பானர்ஜி, மாண்புமிகு மத்திய தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் திருமதி.அம்பிகா சோனி, மாண்புமிகு புதுடில்லி முதலமைச்சர் திருமதி.ஷீலா தீட்சித், இந்திய பொதுவுடமைக் கட்சியின் தேசியச் செயலாளர் திரு.டி.ராஜா ஆகியோரை நேரில் சந்தித்து அழைப்பிதழ்களை வழங்கி விழாவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (25.2.2010) இரவு, விமானம் மூலம் புறப்பட்டு சென்னை வந்தடைகிறார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.